# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. I,
**<u>Present : Tmt.M.Anusuruthi, B.A.,B.L.,(Hons)</u>**
**Judicial Magistrate No.I,**
**Tiruchirappalli.**
## CC.844/2022

Deposition of Witness: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | மனுவேல் | Father / Husband Name | கிறிஸ்டோபர் |
| Village | திருச்சி | Taluk | திருச்சி |
| Calling | | Age | 45/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969(Central Act 44 of 1969) on the day of 01.06.2026.

(எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**<u>முதல் விசாரணை(அரசு தரப்பில்)</u>**

1. நான் தற்போது ஸ்லோவேக்கியாவில் டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். சம்பவ சமயத்தில் நான் திருச்சி கொட்டப்பட்டில் மளிகை கடை வைத்து நடத்தி வந்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். இந்த வழக்கின் விபத்தில் இறந்துபோன கிறிஸ்டோபர் எனது அப்பா ஆவார். கடந்த 19.02.2021ம் தேதியன்று எனது அப்பா கிறிஸ்டோபர் திருச்சி மேலவாளாடியில் உள்ள அவரது தங்கை வீட்டிற்கு செல்வதற்காக, என்னுடைய அக்கா ஜூலியட் கரோலினாவின் TN 45 AE 5207 என்ற பதிவெண் கொண்ட ஸ்கூட்டியை என் அப்பா ஓட்ட, எனது அக்கா ஜூலியட் கரோலினாவின் மகனான 10 வயதுடைய மார்ஷல் என்பவர் பின்னால் அமர்ந்து கொண்டு சென்றார்.

2. மதியம் 02.00 மணியளவில் திருச்சி – சென்னை பைபாஸ் ரோட்டில், காவேரி பாலத்தின் அருகே சென்று கொண்டிருந்தபோது, அதே பாதையில் என் அப்பா சென்ற வண்டிக்கு பின்னால் வந்த TN 47 AQ 0186 என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரி, வேகமாகவும், கவனக்குறைவாகவும் வந்து மோதியதில், என் அப்பா தலை நசுங்கியதாகவும், மார்ஷலுக்கு வலது கை மணிக்கட்டு, வலது கால் மற்றும் உள்ளங்கையில் காயம் ஏற்பட்டதாகவும், சிகிச்சைக்காக தனியார் ஆம்புலன்ஸ் மூலம் திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், சம்பவத்தை நேரில் பார்த்த தாராநல்லூரை சேர்ந்த சந்தோஷ்குமார் எனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார்.

3. நான் உடனடியாக திருச்சி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு என் அப்பா இறந்துவிட்டதாக சொன்னார்கள். மார்ஷலை திருச்சி குளோபல் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்திருந்தார்கள். நான் மார்ஷலை பார்க்க மேற்படி மருத்துவமனைக்கு சென்றிருந்தேன். மார்ஷல் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தார். பின்னர், இது சம்பந்தமாக காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகாரை நான் தான் எழுதினேன். **(அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4. பின்னர், மறுநாள் காலை என் அப்பாவை பிரேத பரிசோதனை செய்து, என் வசம் ஒப்படைத்தார்கள். விபத்து ஏற்படுத்திய டிப்பர் லாரியை ஓட்டி வந்தவர் தர்மராஜ் என்பதை தெரிந்து கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில் )</u>**

1. வழக்கு விபத்து சம்பவம் குறித்து கேள்விப்பட்டு தான் நான் மருத்துவமனை சென்றேன் என்றால், சரிதான். நான் மருத்துவமனைக்கு சென்றபோது, அங்கு வந்த போலிசார் என்னை விசாரித்தபோது, நான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால், சரியல்ல. காவல்நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன். நான் புகார் கொடுக்க சென்றபோது, என்னுடைய மைத்துநர் அற்புதராஜ் என்னுடன் காவல்நிலையம் வந்தார் என்றால், இல்லை.

2. நான் என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தையும் போலிசார் சொல்லிக்கொடுத்ததன் பேரில் தான் சொல்லியுள்ளேன் என்றால், சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால், சரியல்ல. என் அப்பாவின் அஜாக்கிரதையால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால், சரியல்ல. என் அப்பாவின் அஜாக்கிரதையால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றாலும், அதனை மறைத்து எதிரிக்கு எதிராக புகார் கொடுத்து, அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. இறந்தபோன எனது அப்பாவிற்கு நஷ்ட ஈடு வழக்கு தாக்கல் செய்யும் நோக்கில் கொடுக்கப்பட்ட பொய்யான புகாரின் பேரில் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால், சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

என்னால்/ என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் எழுதப்பட்டு, சாட்சிக்கு விளக்கப்பட்டு/படித்து காண்பிக்கப்பட்டு, அது சரியென வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

*Sd/- M.Anusuruthi,*
JM-I
Tiruchirappalli.

# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. I,
**Present : Tmt.M.Anusuruthi, B.A.,B.L.,(Hons)**
**Judicial Magistrate No.I,**
**Tiruchirappalli.**
# CC.844/2022

Deposition of Witness: PW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | அற்புத ராஜ் | Father / Husband Name | வின்சென்ட் |
| Village | புதுக்கோட்டை | Taluk | புதுக்கோட்டை |
| Calling | | Age | 36/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969(Central Act 44 of 1969) on the day of 01.06.2026.

(எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**முதல் விசாரணை(அரசு தரப்பில்)**

1. நான் தற்போது புதுக்கோட்டையில் வசித்து, சென்னையில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். இவ்வழக்கின் விபத்தில் இறந்துபோன கிறிஸ்டோபர் எனது மாமனார் ஆவார். அ.சா.1 எனது மச்சான் ஆவார். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 19.02.2021ம் தேதியன்று மதியம் 02.35 மணிக்கு எனது மச்சான் எனக்கு போன் செய்து, எனது மாமனாரும், எனது அண்ணியின் மகன் மார்ஷல் என்பவரும் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது, காவேரி பாலம் அருகே வைத்து விபத்து ஏற்பட்டதாகவும், திருச்சி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றிருப்பதாகவும் சொன்னார்.

2. நான் உடனே திருச்சி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். பின்னர், மருத்துவமனைக்கு வந்த காவல் ஆய்வாளர் சம்பவயிடத்திற்கு செல்ல வேண்டும் என்று சொன்னதன் பேரில், மாலை 05.00 மணியளவில் காவல் ஆய்வாளருடன், நானும், எனது உறவினர் அருளானந்தம் என்பவரும் சம்பவயிடத்திற்கு சென்றோம். அங்கு போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு, படம் வரைந்து எழுதிக்கொண்டு, கையொப்பம் கேட்டார்கள். அதில், நானும், அருளானந்தம் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். **(பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர், என் மாமனார் இறந்துவிட்டார். மார்ஷலுக்கு வலது கை, வலது காலில் அடிப்பட்டிருந்ததால், ரத்னா குளோபல் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில் )**

1. நானும், அ.சா.1 மனுவேல் என்பவரும் காவல்நிலையம் சென்றபோது, போலிசார் என்னிடம் சாட்சியாக இருக்க சொல்லி கையொப்பம் கேட்டார்கள் என்றால், சரியல்ல.

நான் சம்பவயிடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். இறந்தவர் எனது மாமனார் என்பதால், காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து கொடுத்துவிட்டு, சம்பவயிடத்தில் கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

என்னால்/ என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் எழுதப்பட்டு, சாட்சிக்கு விளக்கப்பட்டு/படித்து காண்பிக்கப்பட்டு, அது சரியென வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

***Sd/- M.Anusuruthi,***
JM-I
Tiruchirappalli.